பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
08 12 2025 MONDAY 6.30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு வந்தே மாதரம் பாடல் உத்வேகம் அளித்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) இண்டிகோ விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டதன் காரணமாக, பயணிகளுக்கு 569 கோடி ரூபாய் அளவிற்கு கட்டணங்கள் திருப்பி வழங்கப்பட்டுள்ளன.

3) யானைகளை இடமாற்றம் செய்யும்போது, கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளை வகுப்பதற்காக, நிபுணர் குழு ஒன்றை தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது.

4) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில், நடைபெற்ற ஊழல் குறித்து திமுக அரசு உரிய விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

5) உலக கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கி போட்டியின் 9 முதல் 16வது இடத்திற்கான ஆட்டத்தில், இந்தியா 3-1 என்ற கோல்கணக்கில் வேல்ஸ் அணியை வென்றது.

>>>>><<<<<

நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு வந்தே மாதரம் பாடல் உத்வேகம் அளித்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் வந்தே மாதரம் குறித்த விவாதத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (1) 37 செகண்டஸ்)

வந்தே மாதரம் பாடல் தான் சுதந்திரத்தை பெற்றுத் தந்த தாகவும் பிரதமர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (2) 18 செகண்டஸ்)

நாட்டின் விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்தவர்கள், வந்தே மாதரம் என்று கூறி, தூக்குக் கயிற்றை தங்கள் கழுத்தில் மாட்டிக் கொண்டதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (3) 38 செகண்டஸ்)

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆகியோரின் பங்களிப்பு குறித்தும் பிரதமர் எடுத்துரைத்தார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (4) 32 செகண்டஸ்)

>>>>><<<<<

இண்டிகோ விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டதன் காரணமாக, பயணிகளுக்கு 569 கோடி ரூபாய் அளவிற்கு கட்டணங்கள் திருப்பி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த ஒன்றாம் தேதி முதல் 7ஆம் தேதிவரை முன்பதிவு செய்திருந்த 5 லட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகளுக்கு இந்த தொகை விடுவிக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான போக்குவரத்து துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நான்காயிரத்து 500 பயணிகளின் உடமைகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

யானைகளை இடமாற்றம் செய்யும்போது, கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளை வகுப்பதற்காக, நிபுணர் குழு ஒன்றை தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது.

முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த குழுவில் 6 பேர் உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ளதாக மாநில அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

வனவிலங்குகளை குறிப்பாக யானைகளை பிடிப்பது, இடமாற்றம் செய்வது மற்றும் விடுவிப்பதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை

உருவாக்குவதற்கான பரிந்துரைகளை இந்த குழு இரண்டு மாதங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ், இதுவரை 99 புள்ளி ஒன்பது ஒன்று சதவீத கணக்கீட்டுப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதன்படி, 6 கோடியே, 40 லட்சத்து 59 ஆயிரத்து 971 கணக்கீட்டுப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில், 99 புள்ளி இரண்டு ஏழு சதவீத படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, சிவகங்கை மாவட்டத்தில், வாக்காளர்கள் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவங்களை சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் சமர்ப்பிக்குமாறு ஆட்சியர் திருமதி. பொற்கொடி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(Sound Byte – பொற்கொடி - 39 Sec.)

>>>>><<<<<

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில், ஆயிரத்து 20 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடைபெற்றுள்ளதாக அமலாக்கத்துறை, காவல்துறை தலைவருக்கு கடிதம் எழுதியுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

கழிப்பறை கட்டுவது முதல் நபார்டு வங்கி திட்டங்கள் வரை பல்வேறு நிலைகளில் இந்த ஊழல் நடைபெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர் திரு. கே.என். நேரு, அவரது உறவினர்கள் வாயிலாக ஒப்பந்தப் புள்ளிகளில் ஏழரை முதல் 10 சதவீதம் அளவிற்கு கமிஷன் பெற்றுள்ளதாக அமலாக்கத்துறை அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, முழுமையாக விசாரணை நடத்த வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் கலவரத்தை தூண்டும் வகையில் திமுக செயல்படுவதாக, பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம சாட்டியுள்ளார்.

திருத்தணியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவது தொடர்பான வழக்கில். நீதிமன்ற தீர்ப்பை செயல்படுத்த வேண்டும் என்று தான் வலியுறுத்தியதாக கூறினார்.

இதற்கு இஸ்லாமியர்கள் யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும், கலவரம் ஏற்படும் என்று தொடர்ச்சியாக கூறி, அதனை தூண்டுவது திமுக தான் என்று அவர் குறை கூறினார்.

எல்லா மதத்தினரும் அவரவர் மதத்தை பின்பற்றலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதில் கலவரத்திற்கு இடமில்லை என்றும் அவர் கூறினார்.

அஇஅதிமுக – பிஜேபி கூட்டணியில் பல கட்சிகள் இணைய வாய்ப்புள்ளதாவும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி கோவிலில் நடைபெற்ற 108 சங்காபிஷேகம் நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

>>>>><<<<<

நாகை மாவட்டம், குருக்கத்தி அரசு வேளாண் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியில் வேளாண் விளைபொருட்களை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றம் செய்து, சந்தைப்படுத்துதல் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.

>>>>><<<<<

விருதுநகர் மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறையில், ஆட்சியர் திரு. ***Sukhaputra*** அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

வேலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் பிரதமரின் தேசிய தொழில் பழகுநர் பயிற்சி முகாமில், ஏராளமான இளையோர் ஆர்வத்துடன் பங்கேற்றுள்ளனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கி போட்டியின் 9 முதல் 16வது இடத்திற்கான ஆட்டத்தில், இந்தியா 3-1 என்ற கோல்கணக்கில் வேல்ஸ் அணியை வென்றது.

சிலியின் சாண்டியாகோவில் நடைபெற்ற இப்போட்டியில், *Hina Bano, Sunelita Toppo* மற்றும் *Ishika* தலா ஒரு கோல் அடித்தனர்.

>>>>><<<<<

இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையேயான இரண்டாவது ஹாக்கி போட்டி இன்று கேப்டவுனில் நடைபெறுகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் முதல் ஆட்டத்தில் வெற்றிபெற்று, இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

>>>>>END<<<<<